ஆதீன வெளியீடு - 19.

ஞான சூடாமணி

★

கணேசன் அச்சகம்
திருநெல்வேலி சந்திப்பு
1948.

வெளியீடு - 19.

உ

568

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை யாதீனத்து வித்துவான்

ஸ்ரீ சபாபதி நாவலரவர்கள்

இயற்றிய

ஞான சூடாமணி

அவ்வாதீனத்து

உ௰௯வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

கட்டளைப்படி

ஷை ஆதீனத்து வித்துவான்

வி. சிதம்பரராமலிங்க பிள்ளை

பரிசோதித்தது.

★

கணேசன் அச்சுக்கூடம், திருநெல்வேலி சந்திப்பு

பிரதிகள் 500.

1948.



திருக்கயிலாய பரம்பரை

திருவாவடுதுறை ஆதீனம்

20-வது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

கணபதி துணை.

முன்னுரை.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சிவாயதேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி தழைக மாதோ.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் இறுதித் திருமுறையாகிய பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் எய-வது திருவிருத்தமாக வுள்ளது

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்.

என்னுந் திருப்பாட்டாகும். இந்தத் திருப்பாட்டுப் பெரிய நாச்சியார் கோணியப்பர் அருளிச்செய்தபடி திருஞான சம்பந்தப் பெருமானுக்குத் திருமுலைப்பால் கொடுத் தருளிய அனந்தரம் அப்பெருமான் பெற்ற ஞானத்திறம் கூறுகின்றது.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் சைவசித்தாந்த சண்டமாருதம் எனப்புகழ் பெற்றிருந்த ஸ்ரீ சோமசுந்தர நாயகர் என்பவர் ஞானபேத விளக்கம் என்ற நூலொன்றியற்றி வெளியிட்டனர். அந்நூலில் குறிக்கப்பட்ட பல விஷயங்களில் இத் திருப்பாட்

டின் பொருளும் ஒன்றாகும். இத்திருப்பாட்டு திருஞான சம்பந்தப்பெருமானார் உமை முலைப்பால் உண்டருளிய அனந்தரம் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை யென்னும நான்கு வகை ஞானங்களும் பெற்றாரென்பது கூறுவதாக நாயகர் கருதுகின்றார் மற்றொரு சாரார் அபரம் பரம் என்னும் இருவகை ஞானங்களையும் திருஞானசம்பந்தப்பெருமானார் பெற்றருளினமை கூறுகின்றது இத்திருப்பாட்டு எனக் கருதினார்கள். இருகட்சியாருக்கும் அபரம் பரமென்னும் ஞானமும் உடன்பாடே; கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் ஞானமும் உடன்பாடே இத்திருப்பாட்டிற் கூறப்பட்டது இரண்டு ஞானமுமுணர்ந்தமையா நான்கு ஞானமும் உணர்ந்தமையா என்ற அளவில் கருத்து வேறுபாடு இரு திறத்தாருக்கும். அதனால் வாதப் பிரதிவாதங்கள் பல நடந்தன.

இந்நிலையில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து முனிபுங்கவர்கள் தமது ஆதீனத்திற்குப் பரமப் பிரமாண நூலாக விளங்கும் பெரியபுராணத்திலுள்ளதும் நாடோறும் ஆதீனத்து ஸ்ரீ ஞானமா நடராஜர் பூஜை முடிவில் ஓதப்படுவதுமாகிய அத் திருப்பாட்டின் பொருள் சம்பந்தமாக எழுந்த விவாத விஷயம் தெரிந்து 'அத்திருப்பாட்டின் மெய்ப்பொருள் புலப்பட ஒருநூல் செய்க' என்று அக்காலத்து ஆதீனத்து வித்துவ ஸ்தானத்தை அலங்கரித்திருந்த ஸ்ரீ சபாபதி நாவலரவர்கட்கு ஆணை தந்தருளினார்கள். அவர்கள் ஆணையைக் கடைப்பிடித்து நாவலர்கள் 'ஞான சூடாமணி' என்னும் இந்நூலை இயற்றி அக்காலத்து ஆதீனத்து மகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மேலகரம் சுப்பிரமணிய

தேசிக சுவாமிகள் முன்னிலையில் அரங்கேற்றி வெளியிட்டார்கள். இவ்வுண்மை இந்நூற்பாயிரத்து வரும்.

நவிலு மிவ்வுரை கொண்டுற நயக்குமாண் கயிலை
யுவமை யில்பரம் பரையினெண் டுறைசைவீற் றிருக்குஞ்
சிவமி குந்தொளிர் சுப்பிர மணியதே சிகனார்
தவவி ளங்குறு சந்நிதி ஞானமா சபையே.

என்னும் செய்யுளால் விளங்கும்.

இந்நூலில் சைவசித்தாந்த நுண்பொருள்கள் பல விளக்கப்பட்டிருக்கின்றன. அக்காரணத்தால் சைவ சித்தாந்த வுணர்ச்சியுடைய பல பெரியோர்கள் இதனை அச்சிட்டு உபகரிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அவ் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு இப்பொழுது அவ்வாதீனத்தில் உ௰-வது மகா சந்நிதானமாக எழுந்தருளித் தமிழையும் சைவத்தையும் பேணிவரும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் அந்நூலை செம்மையான முறையில் பரிசோதித்து அச்சிடுவிக்குமாறு அடியேனுக்குக் கட்டளையிட்டருளினார்கள். அவர்களது திருவாணையை சிரமேற் கொண்டு என் அறிவுசென்றஅளவில் நூலைப்பரிசோதித்து முடித்திருக்கிறேன். குணங் கொண்டு கோதாட்டுதல் அறிஞர் கடன்.

நுணங்குஞ் சமய நூற்றலைமை நுவலுந் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான போதக் கதிநூ னெறிகாட்டிப்
பணங்கொ ளரவர் துறைசையில்வாழ் பஞ்சாக் கரதே சிகன் [மலர்த்தாள்
வணங்க வழுத்த மனத்திருத்த வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

திருவாவடுதுறை
சர்வசித்து௵
கார்த்திகை௴ 21௳

வி. சிதம்பரராமலிங்க பிள்ளை,
ஆதீன வித்துவான்.

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

ஞானசூடாமணி.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

தற்சிறப்புப்பாயிரம்.

மோனவான் கயமுக மூர்த்திதாள் போற்றுது
ஞானசூ டாமணி நலம்பெறற் பொருட்டே.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

நவிலு மிவ்வுரை கொண்டுற நயக்குமாண் கயிலை
உவமை யில்பரம் பரையினென் றுறைசைவீற் றிருக்குஞ்
சிவமி குந்தொளிர் [1]சுப்பிர மணியதே சிகனார்
தவவி ளங்குறு சந்நிதி ஞானமா சபையே.

---

1. பதினாறாவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ: மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்.

[1] இக்காலத்துத் திராவிடர்களிற் சிலர் திருவருட் பெருஞ்செல்வர்களாகிய உண்மை நாயன்மார்கள் அருளிச் செய்த மெய்யருட்டிரு முறைகளாகிய தேவார முதலிய உண்மை நூல்களையும் மெய்கண்ட சித்தாந்த சைவசாத் திரங்களையும் அம்மரபில்வந்த சிவஞானயோகிகள் உண்மை நூலுரைகளையும் நல்லாசிரியர் வழிபட்டுத் தொல்காப்பிய இயல்வரம்பு தெரிந்து நியாய நெறி கடைப்பிடித்து ஆராய்ந்து பொருளுண்மைதேறும் தவமுயற்சி இல்லாமை யால், நல்லாசிரியரல்லார் மாட்டு அவைதம்மை ஆராயப் புகுந்து அறிவறியாமை இரண்டும் புலமையெனப் பரிண மிக்கப் பெற்றாராய் அம்மெய்யருட் டிருமுறைகளின் பொருள்களையும் மெய்கண்ட சித்தாந்த சைவசாத்திரங் களின் பொருள்களையும் அம்மரபில்வந்த சிவஞானயோகி கள் உண்மை நூலுரைகளின் பொருள்களையும் மனம் போனவாறு வரம்பழித்துப் பொய்ப்பொருள் கூறித் தம்மைத்தாமே [2] இறப்ப உணர்ந்தாரென மதித்துக் கழி பெருங் களியாட்டயரா நிற்பர். அவர் அதுமட்டோ, பிற செந்தமிழிலக்கிய விலக்கண நூலுரைகளையும் தந்தம் வெள்ளறிவுகொண்டு அவ்வாறாராயப்புகுந்து தொல்லை வரம் பழித்துப் போலிப்பொருள் கூறிக் களியாட்டயரா நிற்பர். நல்லாசிரியர் அவர்பொய்ப்புலமை கண்டு ஏயே! இவர்புலமை இஃதோவென எள்ளி நகையாடா நிற்பர். அது நிற்க

ஞானசோமசுந்தர நாயகர் சின்னாளின்முன்னர் ஞானபேத விளக்கம் என்று ஒன்று வெளியிட்டார். அதன்

1. அறுபது ஆண்டுகட்குமுன்.
2. இறப்ப - மிக

கண் ஞானவரம்பும் [1] "சிவனடியே சிந்திக்கும்" எனவரும் பெரியபுராணத் திருப்பாட்டின் மெய்ப்பொருளும் பிறவும் அவாற் பெரிது மலைக்கப் பட்டமைகண்ட பெரியோர் அதுபற்றி உலகுக்குவரும் ஏதத்திற்கு அஞ்சி அதற்கோர் மறுப்பு எழுதுமுகத்தானே அத்திருப்பாட்டின் உண்மை ஞானம் பொருள்புலப்பட வொருநூல் செய்கவென்று ஆணைதந்தருளினராக அது கடைப்பிடித்து அவ்வாற்றான் 'ஞானசூடாமணி' என்னும் பெயரினால் இதுகூறப் புகுந்தா மென்பது.

"ஞானபேதவிளக்கம்" என்பது ஞானத்தின் மறுதலை விளக்கமெனப் பொருள்தந்து "நானும் அறியேன் அவ னும் பொய்சொல்லாள்" என்னும் பழமொழியைத் தெற் றெனப் புலப்படுத்துமாறு காண்க.

காப்புச் செய்யுளில் "நால்வித" மென்பது நாலும் விதமென அமங்கலப் பொருள்தந்து 'தொகையார்பொருள் பலவாய்த் தோன்றுதல்' காண்க.

"ஞானமென்பது அறிவெனவிளங்கும்" என்றார். ஈண்டு அவர் "ஞானமென்பது" என்றெடுத்தது ஞானத் தின் இலக்கணம் உணர்த்தற்கோ? அதன் பொருளு ணர்த்தற்கோ? இலக்கணம் உணர்த்தற்கேயெனின், அதன் சொரூபம் புலப்படும் பொருட்டு அவர் ஈண்டுக் கூறிய விலக்கணம் என்னை? அறிவென விளங்குதலே யெனின், அது பிறிதொரு சொல்லால் அதன் பொரு ளுணர்த்தியதேயாம். சொரூபம் புலப்படாமையின் இலக் கணமாகாதென்க. இனிப் பொருளுணர்த்துங்காலும்,

1. பெரியபுராணம் - திருஞான. எம.

பயிலாத சொற்களைப் பயின்றசொற்கள் சார்த்திப் பொருளுணர்த்தலே முறையாம். ஞானமென்பதும் அறி வென்பதுபோலப் பயின்றுவருவதொரு சொல்லா தலின், அதற்கு அதனாற் பொருளுணர்த்துதல் நின்று வற்றுதலென்னுங் குற்றமாமென்க. அல்லதூஉம், பயின்ற சொற்களைப் பயின்ற சொற்கள் சார்த்திப் பொருளுணர்த்தலுறின் அங்ஙன முணர்த்தவந்த சொற் கும் பொருள் யாதென்று மேலுமேலும் பொருட்குப் பொருடெரியப்புகுவான்றே; புகுதாவே அவ்வினா [1]இறைவரம்பின்றியோடுமென்பது. இது பற்றியன்றே [2] "பொருட்குப் பொருடெரியினதுவரம்பின்றே" என வும், [3] "மாபுநிலைதிரியிற் பிறிது பிறிதாகும்" எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் ஓதியருளியதூஉ மென்க. இன்னும் "விளங்கும்" எனவொரு சொல் ஆண்டு மிகை யாய் நிற்றலுங்காண்க.

'தேகமுதலிய ஜடப் பொருள்களையன்றி வேறு சித்துப் பொருள்களில்லையென்று அறியும் அறிவே பாச ஞானம்; ஆன்மாவாகிய சித்துப்பொருளையன்றி வேறு ஜடசித்துப் பொருள்களில்லையென்று அறியும் அறிவே பசுஞானம்; ஜடப்பொருள்களை யுடைமையாகவும் ஆன்ம சித்துப் பொருள்களை அடிமையாகவுங்கொண்டு அசைப் பித்தும் அறிவித்தும் இயங்கும் பரமான்மாவாகிய சித்துப் பொருளை அறியும் அறிவே பதிஞானம்" என்றார்.

---

1. இறை—விடை
2. தொல் சொல். உரியியல் 95.
3. ஷை பொருள் மரபியல் 91.

பொருள்களன்றியென உரைக்கவறியாது பொருள்களை யன்றியென ஈரிடத்து ஐயுருபுகள் முடிபின்றி வாளா கிடக்க உரைத்தார். என்னை? ஆண்டுப் பொருள்களென் பன எழுவாய் வேற்றுமையாகியே நின்று உண்டு என்னும் பயனிலை கொண்டு முடிதலானென்க. வாக்கியந்தோறும் பிறழ்ந்து கிடக்குங் குற்றங்களை இங்ஙனம் ஆண்டாண் டுரைக்கப் புகின் பெருகுமாகலின், அவற்றினை லக்ஷியப்படுத்தாமல்விட்டு, [1]ஸதாலீபுலாக நியாயம்பற்றிப் பெரிய [2] அநர்த்தங்களை விளைவிக்கும் பொருட் குற்றங்களையாத்திர மெடுத்துக் காட்டி ஒழித் துப்போவோம்.

அவர் பாசஞானம் பசுஞானம் பதிஞானமென்னும் [3] பரிபாஷைகள் சைவர் கொள்கையென்று கூறி அவை களுக் கிலக்கணம் [4] பரபக்கமாகவே யுரைத்தார். என்னை? அவர்கூறிய பாசஞான பசுஞான இலக்கணங்கள் நாஸ்திகர் நையாயிகர் சாங்கியர் மாயாவாதிகள் முதலியோர் கொள்கைகளாயும், பதிஞான இலக்கணம் பேதவாதசைவர் பாடாணவாதசைவர் முதலியோர் கொள்கைகளாயும் இருக்கலானென்க. அவ்வ அவ்வாறுதல் யாம் முன்னர்ச் சித்தாந்தசைவக் கொள்கைகளெனக்கூறும் அம்மூவகை ஞான இலக்கணங்கள்பற்றி இனிதுணர்க.

---

1. ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்னும் நியாயம்.

2. அநர்த்தம்—கேடு

3. பரிபாஷை—குறியீட்டு வழக்கம்.

4. பரபக்கம்—பிறர் சார்பு

[1] பாசஞானமாவது முப்பொறி முதலியனபற்றி ஏகதேசமாய் நிகழுஞ் சுட்டுணர்வாம். பசுஞானமாவது தற்சொரூபமேயறியமாட்டாது பல தலைப்பட்டு நிற்கும் ஐயவுணர்வாம். பதிஞானமாவது தானே தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமாய் எல்லாப்பொருள்களையும் இனிது விளக்கும் அருளுணர்வாம். இவையே சித்தாந்தசைவர்கள் கூறும் அம்மூவகைஞான இலக்கணங்களாம். முப்பொருள் கொள்ளுஞ் சித்தாந்த சைவர்களுக்கும், முப்பொருளுணர்வு முப்பொறி முதலியனபற்றி ஏகதேசமாயும் பசுத்துவ வாதனைபற்றி ஐயவுணர்வாகியும் அருள்பற்றி மெய்யுணர்வாகியும் முறையே நிகழ்ந்து முற்றுநிலை பெறுமென்பது சிவாகமநூற் றுணிபென்றறிக. இஃதென் சொல்லிய வாறோவெனின்;-சித்தாந்த சைவர்க்குப் பதிஞானம்போல மற்றை யிருவகை ஞானங்களும் மெய்யுணர்தற்கட் சாதகமாவனவோவென்று ஐயுறுவார்க்கு [2] அவையும் அவ்வுணர்ச்சிக்கண் அவர்க்குப் பூர்வசாதகமாவனவேயென ஐயமொழித்தவாறென்க.

"பாசம் ஜடமாகையால் அது ஒன்றினையு மறியாது; பதிநிர்மலசித்தாகையால் அதுவும் ஒன்றினையுமறியாது; பசுவானது மலசித்தாகையால் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும் பதியோடு சேர்ந்து பதியாயும் விளங்கும்"

---

1. சிவஞான சித்தி. சுபக்கம். 9-ம் சூத்திரம். திரு விருத்தம் 4 சிவஞான சுவாமிகள் உரை.

2. ஷை சூத்திரம். திரு விருத்தம் உள் உரையில் 'அஃதங்ஙனமாக........ பயன்படுதலுடைமையின்' என்றருளியது உணரற்பாலது.

என்றார். பாசம் ஜடமாதலின் அது ஒன்றினையு மறியா தென்றல் பொருந்தும். பதியை நிர்மல சித்தென்றுகூறிப் பாசம்போல அதுவும் ஒன்றினையும் அறியாதென்றல் பொருந்தாமையறிக. ஒன்றினையும் அறியாதென்பதற்கு ஒன்றினையும் அனுபவ விடயமாகச் சுட்டியறியாது பொது மையின் அறிந்தாங்கறிந்து நிற்குமென்பதே பொருளெனின், ஒன்றற்கு இலக்கணங்கூறுமிடத்துச் சொற்குறை யாமலும் பல்காமலும் [1] அவ்வியாத்தி [2] அதிவியாத்தி [3] அசம்பவம் என்னும் குற்றங்கண் மூன்றும் அணுகாமலும் பொருளினிது விளங்குமாறு வாக்கியங்கூறலே நெறியாம். அவ்வாறன்றி மனத்திலொன்று குறித்து மற்றொன்றுபட வாக்கியங்கூறுதல் வாக்கியநெறி யாகாதென்க. உய்த் துணருமாறு அங்ஙனம் உரைத்தாரெனின், அவாய்நிலை கொண்டு பொருந்துமாறுபற்றி உய்த்துணருமாற்றானுரைப் பது செய்யுட்கும் செய்யுளோடொக்குஞ் சூத்திரவார்த்தி கங்களுக்கு மியலுவதன்றி மற்றை மெல்லுரை நடைக் கன் றெனமறுக்க. மற்று அதுதானும் அவைபோல உய்த் துணரு மாற்றான் உரைக்க இயலுவ தாங்கால், அறிவின் மெலியராய இடை மாணாக்கர் கடைமாணாக்கர் என்னுமிரு திறத்தாரும் அவற்றின் பொருள் அறியுமாறின்றிக் கலங்கி உறுதிகூடா ரெனவுமுரைக்க. பசுவிற்கு அறிவு விளங்கு

---

1. அவ்வியாத்தி—வியாபித்தலின்மை. அஃதாவது இலக் கணம் இலக்கியத்தின் ஏகதேசத்தில் இருத்தலின்மை.

2. அதிவியாத்தி—மேல் வியாபித்தல். அஃதாவது இலக் கணம் இலக்கியமல்லாததன் கண்ணும் இருத்தல்.

3. அசம்பவம்—இருத்தலின்மை. அஃதாவது இலக்கணம் இலக்கிய முழுதினும் இருத்தலின்மை.

இவற்றைத் தருக்க சங்கிரகத்து 2-ம்பகுதி உரையிற்காண்க.

மாறு உணர்த்தும் பொருட்டுப் பசுவானது என்று எடுத்தார், அஃது இப்பெற்றித்தாக அறியுமென்று மேல் வாக்கியங்களோடு பொருந்த முடித்துக்கூறுது, மலசித்தாகையால் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும் பதியோடு சேர்ந்து பதியாயும் விளங்குமென்று நிலைகூறியொழிதல் பொருந்தாமையறிக. பிறவும் இவ்வாறு நெகிழ்ந்து போவனவற்றையும் எடுத்துக்காட்டாம்; என்னை? அவையும் விரிந்து மற்ருென்று விரித்தலென்னுங் குற்றமாய் முடிதலினென்க.

அவர் இங்ஙனம் தலைப்பெய்துரைத்துப் போந்து, தாங்கொண்டபடி, பெரிய புராணத் திருப்பாட்டில் நால் விதஞானம் நாட்டத்தொடங்கிப் "பதியாகிய சிவன் சுட்டறநின்று தன்னையறிவிக்குங்கால் அங்ஙனம் அறியும் அறிவு நால்வகைப்படும்; அவை கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்பன; இவை சிரவணம் மநநம் நிதித்தியாசநம் சமாதியெனவும்படும்; இவைகளையே "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெஞ்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தாரந்நிலையில்" என்று அருண்மொழித் தேவர் கூறினர்—இதில் முதலடியில் சிந்திக்கும் ஞானமென்னும் மநநமும் இரண்டாவதடியில் பாங்கினிலோங்கிய ஞானமென்னும் நிதித்தியாசநமும் மூன்ருவது அடியில் கலைஞான மென்னும் சிரவணமும் முடிவில் மெஞ்ஞானமென்னுஞ் சமாதியும் தெள்ளிதின் விளங்குமென்றும், 'இவ்வாறு பொருள்கொள்ள அறியாதார் ஞானமிரண்டேயெனவும் நாலுயாண்டுங் கண்டதுமில்லை கேட்

டதுமில்லை எனவுங்கூறிக் களிப்பரென்றும், பரம் அபர மென்னும் ஞானபேதங்களை யாமும் அங்கீகரித்திருக்கின்றோம்; சேக்கிழார்கூறிய ஞானப்பாடலில் அது சேராதென்பதே துணிவென்றும், பூர்வ பக்கத்தார் தங்கொள்கையைப் பலப்படுத்தற்கு [1] "மேவருஞானமிரண்டவற்றொன்று விமலனூர் பாததாமரையே, ஓவறுமன்பினுணர் திருவளிக்கு மொப்பிலாவுயர் கலைஞானந், தாவரும் பாவத்தைவேரொடுங்களையுந் தக்கமெய்ஞ்ஞான மென்றிவற்றாற், சாவதும் பிறப்புந்தணப் புறச்சிவத்தைச் சார்ந்ததுவாய் நிற்றல் யோகம்" என்னுந் திருத்தணிகைப் புராணச் செய்யுளை ஆதாரமாகத் தேடிக்கொண்டனரென்றும், 'ஈழ நாட்டாருட் பலரும் தொண்டை நாட்டாருட் சிலரும் இச்செய்யுள் பெரியபுராணத் திருப்பாட்டின் பொருளை நிர்வசனஞ் செய்தலின் அத்திருப் பாட்டின் பொருளை இருவகை ஞானவிடயமே என்று கொண்டு போதருகின்றார்களென்றும். தொண்டை நாட்டாருட் பலரும் ஈழ நாட்டாருட் சிலரும் அத்திருப்பாட்டின் பொருள் நான்கு ஞானங்களா மென்னும் நங்கொள்கையையே தங் கொள்கையாகக் கொண்டு போதருகின்றார்களென்றும், 'தம்பிரான் கூறிய இருவகைஞானம் சேக்கிழார் அருளிச் செய்த திருவாக்கில் சேர்ந்து அமையா' வென்றும் பல வாறு கூறினர்.

தொண்டைநாட்டாருட் பலரும் ஈழநாட்டாருட் சிலரும் நங்கொள்கையைத் தழீஇ நிற்கின்றார், ஈழ நாட்டாருட் பலரும் தொண்டை நாட்டாருட் சிலரும் நம் மறு

---

1. தணிகைப் புராணம்—அகத்தியனருள் பெறுபடலம். ௩௫௩.

தலைக் கொள்கையைத் தழீஇ நிற்கின்றார் என்று போதரு வித்தது யாது? இரு கொள்கைகளுஞ் சமபல முடையன வென்பதேயெனின் தாங்கூறு ஞானங்கள் நான்கனையு மொப்பாது வேறு ஞானம் நான்கு கூறும் அவர் தம்மை அவர் தழீஇக் கூறும் பலம் துர்பலமாதலன்றிச் சமபல மாகுமோ? ஆகாதாகவே, இக்கூற்றினால் அவர்க்குப் போந்தபலம் யாதுமின்றென்க. அது கிடக்க, சோநாட் டார், சோழ நாட்டார், பாண்டி நாட்டார் இவ்விரண்டு கொள்கைகளுள் இது தழீஇயினதென்று எடுத்தோது தல் அத்தியாவசியமாகவும், அது அவர் கூறாததென் கொலோ? [1] இவரெல்லாம்[2] மேலையோர்போலக் கைலாய பரம்பரையில் வந்த சிவஞானயோகிகள் பலரும் அத்திருப் பாட்டின் மெய்ப்பொருள் இதுவெனத் துணிந்துரைத் தருளிய இரு முதல் ஞானப்பிரபலக் கொள்கையை மறு தலைத்துத் துர்ப்பலமுடைய தங்கொள்கையை அங்கீகரிக்க மாட்டார்கள் என்று கருதிக் குன்றக்கூறலென்னுங் குற்றம் பட அது கூறாதொழிந்தார் போலும்! மற்றிது [3] மசகக் கடிக்கஞ்சிப் புலியின் வாய்ப்பட்ட கதைக்கு இனமென்க.

இனி ஞானப்பகுதிகளான கேட்டல் முதலிய நான் கும் அப்பெரியபுராணத் திருப்பாட்டில் முக்கியப் பொரு ளின்வழி உட்படு பொருளாகப் பெறப்படுமென்பது எம் மனோர்க்குஞ் சம்மதமேயாம். மற்று அவை அத்திருப் பாட்டின் முக்கியப்பொருளாக உரைக்கப்பட்டன வென் பது எம்மனோர்க்கு உடன்பாடன்றாம். அத்திருப்பாட்

---

1. சோ நாட்டார் முதலிய மூவரும்
2. ஈழ நாட்டாருட் பலரும், தொண்டைநாட்டாரிற் சிலரும்
3. மசகம்—கொசுகு.

டின் முக்கிய பொருள்கள் இவை என்பதூஉம், இவையும் இன்னோரன்ன பிறவும் அவற்றின் வழிப்படும் உட்பொருள்களென்பதூஉம் போதந்து கூறுதும். ஞானத்தின் சொரூபமும் அது இருமுதலாமாறும். கேட்டன் முதலிய நான்கும் அவ்விரண்டன் வகையாமாறும் முன்னர்த் தெரிப்பாம்.:—

பௌஷ்கராகமத்தில்

[1]சிவஸ்ய ஸமவேதாயாஸ்ஸக்திர்க்ஞாநாத்மிகாமலா,
ஸைவக் ஞானமிதி பிரோக்தம் ஸாப்தம் தத நுமாபகம்.
என்றருளிச் செய்யப்பட்டது.

இதன் பொருள்:- சிவனுடைய நிர்மலமான சமவேத ஞான சத்தியேஞானமென்று நூல்களால் உறைக்கப்படும்; சத்கம் அந்த ஞானம் விளங்குதற்கு, ஏதுவாமென்றவாறு. [2]பல்பொருட்கேற்பின் நல்லதுகோட லென்பதனால் ஈண்டுச்சத்த மென்பதுபற்றிச் சிவாகமமே சிறப்பாற்றாற் கொள்ளப்படும். ஈண்டு வேதம் அதுபற்றிக் கொள்ளப் படாதோவெனின்; பொதுவாற்றாற் கொள்ளப்படுமன்றே. அதுதானுஞ் சிவாகமத்தோடு ஒற்றுமையுடையதொரு முதனூலாய்த் தத்துவ ஞானத்தினைப் பயக்குஞ் சாதனமாய் நிற்றலினென்க. சிவஞானம் விளங்குதற்குச் சிவாகமம் ஏதுவாமெனவே, அது மற்றொரு சிவஞானமாமென்பதுதானே பெறப்படுமென்க.

---

1. பௌஷ்கராகமம் பதிபடலம் எ, ங இ.
2. தொல், பொருள், மரபியல் ௱௬௦.

இனிச் சிவப்பிரகாசத்தில்[1] "உயர்ஞான மிரண்டா மாறுமலமகலவகலாதமன்னு போதத் திருவருளொன் றென்றதனைத் தெளியவோதுஞ் சிவாகமமென்றுலகமறி யச் செப்புநூலே" என்று இவ்வாறு அருளிச்செய்யப் பட்டது பௌஷ்கரச்சுருதி ஞானம் இருமுதலாதலையே எடுத்தோதிற்று, சிவப்பிரகாசச் சுருதியோ வெனின், ஞானம் இருமுதலாமென்றும், நிர்வசனம் பண்ணுமுகத் தானே அவ்விருமுதன் ஞானங்களும் கேட்டன் முதல் நான்கவாமென்றும், எடுத்தோதிற்று. பௌஷ்கரச்சுருதி யின் பொருளையே எடுத்துக்கொண்டு விளங்க உரைத்த லின், சிவப்பிரகாசச்சுருதி அதற்கு உபபிருங்கணத்துணிபு ரையாய் எழுந்ததெனவேபடும். என்னை? பௌஷ்கரசுருதி யில் சத்தமென்று பொதுவாகக் கூறியதனைச் சிவாகம மென்று சிறப்பாக எடுத்தோதி, அதற்கு ஆண்டுப்பெறப் படாத ஞா[2]பிதானத்தைப் பெறுவித்து, அவைதாம் ஒரி னமாத றெளிய உயர் ஞானமிரண்டாமென்று நிர்வசனஞ் செய்தமையா லென்க. அற்றேல், பௌஷ்கரச் சுருதிக்கு உபபிருங்கணத் துணிபுரையாய் எழுந்த இச்சிவப் பிரகாசச்சுருதி இருமுதன் ஞானங்களும் நான்கவாமென அதனுற்கூறப்படாத பொருளையும் உடன்கொண்டு ஓதிய தெற்றிற்கெனின்—நன்றுவினுயினுய். ஞானம் இரண்டா மென்றும் நான்காமென்றும் முந்து நூல்கள் கூறுதலின், அவைதாம் வேறு வேறுவனவேயோ ஒன்றுவனவேயோ என்று பொருள் ஒருமைகாண மாட்டாது மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்காது இருமுதன் ஞானங்களே நால்வகை

1. சிவப்பிரகாசம் பாயிரம் ௧௦.
2. அபிதானம்—பெயர்

யாக உரைக்கப்படுமென்று அவற்றின் ஒருமையுணர்த்து தற்கு அவ்வாறுகொண்டோ திற்றெனக. இஃது உணர்ந்து கோடற்கன்றே ஒன்றதனைத் தெளியவோதுஞ் சிவாகம மென்றெழியாது; [1] ஓதுஞ்சிவாகம மென்றுலகறியச் செப்புநூலே' என்று முந்துநூல்களின் கருத்து ஒருப்படுத்துவார்போன்று அவைதம் மேல் வைத்து ஓதியருளிய வாற்றினைச் சிறிது புலப்படுத்துவாம்.

ஞானத்தின் பாகுபாடுணர்த்தி யருளுகின்றார் :— உயர்ஞானம் இரண்டாம் என்பது — உயர்ஞானம் பரஞானம் அபரஞானமென இருமுதலா மென்றவாறு. அது தனக்குயர்ச்சி [2] 'மூந்நிலைக்காலமுந் தோன்றும் இயல்'பிற்றாகலின் உயர்ஞானம் நிகழ்கால வினைத்தொகை. இனி அவைதாம் இவையென நிர்வசனஞ் செய்தருளுகின்றார். 'மாறுமலமகலவகலாதமன்னு போதத்திருவருளொன்று என்பது – [3]பிராரத்தவினை மங்கிப்போயவழியும் மங்காது நின்று உழல்விப்பதாகிய பசுத்துவவாதனை பற்றறக்கழியுமாறு நிலைபெற்றுபகரிக்குந் தெளிதலறிவின் பயனாகி விளங்குந் திருவருண் ஞானம் ஒன்று என்றவாறு. இதன் கண் மாறு மலமகலவகலாது மன்னுபோதம் என்றதனாற்றெளிதலும், அதன் பயனாகிய திருவருண்ஞான மென்றதனால் நிட்டையாகிய அனுபூதியும், பெறப்படும். ஈண்டுமலமென்றது பசுத்துவவாதனையை. போதத்திருவருள் என்பது —

1. சிவப்பிரகாசம் பாயிரம் ௧0
2. தொல். சொல். வினை. ௬௩
3. சிவஞான சித்தி. ௧பக்கம் சூத்திரம். திருவிருத்தம் உ உரை.

போதத்தினது பயனாகிய திருவருளெனவிசியும். [1] ஆறாவது பண்பின் கிழமையும் உணர்ச்சிக் கிழமையும் பற்றிவந்தது. அதனைத் தெளியவோதுஞ் சிவாகமமொன்று என்பது— அத்திருவருண் ஞானத்தினைச் சிந்தித்தற்குச் சாதகமாய் ஓதப்படும் சிவாகமஞானம் மற்றொரு ஞானமாகும் என்றவாறு. இதன்கண் ஓதுஞ்சிவாகம மென்றதனாற் கேட்டலும், தெளியவென்றதனாற் சிந்தனையும் பெறப்படும். தெளிதற்குக் காரணமாகிய சிந்தனையைத் தெளிவெனக் காரியமாகவும் ஓதலின் பயனாகிய கேட்டலை ஓதலெனக் காரணமாகவும் உபசரித்தருளினர். தெளியவோதுமென் புழிச் செயவெனெச்சம் காரியப்பொருளில் வந்தது. ஓதுஞ் சிவாகமம் கருமகருத்தன். இதனால் ஞானசொரூப மிது வென்பதும் அது பரஞானம் அபரஞானமென இரண்டாமாறும் கேட்டன் முதலிய நான்கும் அவற்றின் வகையாமாறுந் தெரிக்கப்பட்டன. இனிப்பரஞானம் அபரஞான மென்னும் இருமுதலும் சிவனடியே சிந்திக்கு மென்னுந் திருப்பாட்டில் இங்ஙனம் வகைபெற அருளிச்செய்யப் பட்டவாறும் பிறவுத் தெரிப்பாம்.

[2] சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்.

என்பது திருப்பாட்டென் னுதலிற்றோவெனின்; ஆளுடையபிள்ளையாருக்குத் தவமின்றியும் ஞானநிகழ்ந்தவா

---

1. சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரம் முதலதிகரணத்து எதுவின் உரைக் குறிப்புக் காண்க.
2. பெரிய புராணம் திருஞான: திருவித்தம் எ0

றென்னை என்னுங் கடாவை ஆசங்கித்து அதனைவிடுக்கு முகத்தானே அப்பிரானார் உணர்ந்தருளிய ஞானத்தின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று. இதன்பொருள்;— தவ முதல்வர் சம்பந்தர் தாமென்பது, முற்றவவிசேடத்தானே திருஞானசம்பந்தராகி விளங்கும் ஆளுடைய பிள்ளையா ரென்றவாறு. [1]முதல்வர் வினையெச்சமுற்று. ஈண்டுச் செய் தெனச் சங்காரணகாரியப் பொருட்டாய் நின்றது. [2]சம் பந்தர் தாமென்பது கட்டுரைச் சுவைபட நின்றது, [3]'வேற்றுமைதாமே' என்புழிப் போல. ஆண்டைப்பன் மைக்கிளவி[4] வழக்கினுகிய உயர்சொற் கிளவியாய்ப் பயின்று செய்யுட்கண்ணும் வந்தவாறு. ஆக்கம் தொகுக் கும்வழித் தொகுத்தலாதலின் விரித்துரைக்கப்பட்டது. முதல்வன் பிரளயாகலர்க்குப்போல நாற்றோளும் முக்கண் ணும் கறைமிடறு முதலிய உறுப்பிற்றாய் முத்தொழில் நடாத்திநின்ற தன் இயற்கைவடிவே குருவடிவாகக்காட்டி முன்னாக நின்று தத்துவ ஞானத்தினை உபதேசித்துணர்த் தற்கேதுவாம் பெருந்தவ மென்பார் தவமுத லென்றும், அத்தவமுடையாராகிய எதுவாற்றானே திருஞானசம்பந்தரா யினாரென்பார் தவமுதல்வர் சம்பந்தரென்று உடம்பொடு புணர்த்தியும் ஓதியருளினார். அம்முதற் றவமாவது பக் குவமுதிர்ச்சி பற்றிநிகழும் நாலாஞ் சத்திநிபாதமுதிர்வினா னெய்திப் பதினாறுவது அவதித்தாய் நிற்குந்தலைமைச் சிவ புண்ணியமாம். கலிவிருத்தத்தாற் கூறி யருளியதூஉம்

---

1. குறிப்புவினைப் பெயரெச்சமுற் றென்றவாறு
2. உரையிற் கூறப்பட்டதன் விளக்கம்
3. தொல், சொல், வேற்றுமையில் ௧.
4. தொல், சொல், கிளவி. ௨௭.

இஃதுணர்ந்து கோடற்குப்போலும். எனவே ஆளுடைய பிள்ளையாருக்கு முற்றவ விசேடத்தானே சிவஞானம் நிகழ்ந்ததென விடுத்தவாறாயிற்று.

அற்றேல், ஈண்டுச் சகலருள் வைத்துச்[1] சாமுசித்தக ரென்று ஓதியருளிய ஆளுடைய பிள்ளையாரைச் சீகாழி மான்மியமுதலிய சில நூல்கள் சுப்பிரமணியக் கடவுள் என்று கூறுதன் மாறாகாதோவெனின்:— ஆகாது; அவை அபரசுப்பிரமணிய மூர்த்தி என்னுங்கருத்தால் அங்ஙனம் ஓதுதலினென்க. சிவஞானபோதச் சிற்றுரையில்[2] ஆளுடையபிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞான நிகழ்ந்தவாறென்னை என்னுங்கடாவை விடுத்தற்கு மேற் செய்துழி என ஈண்டும் வலியுறுத்தார்" என்று ஓதியருளு தலின், திராவிடமாபாடிய முனிவர் கருத்தும் இதுவே என உணர்க. இதன்றிறமெல்லாம் பராபரசுப்பிரமணிய நிரூபண மென்னுங் கிரந்தத்தில் விரித்துக் கூறுதும். ஆண்டுக்காண்க.

சிவனடிமீய சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக் கலைஞானம் என்பது சிவபிரான்றிருவடி யையே சிந்தித்தலாகிய திருவை வளர்விக்கும் ஞானமாகிய ஒப்பில்லாத கலைஞான மென்னும் அபர ஞானத்தினையு மென்றவாறு. சிவனருளைச் சிவனடியென்றும் கலைஞானத் தினை சிவஞானமென்றும் உபசரித்தருளினர். ஏகாரம் தேற்றம்; பிரிநிலை எனினுமாம், [3]'நின்றாகங்காணு மருந்

1. மிருகேந்திராகமம் கலாதிபிரகரணம் உ௩ இ-௩௦
2. சிவஞானபோதச் சிற்றுரை அ-ம் சூத்திரம். முதலதிகாரணம்.
3. கலித்தொகை குறிஞ்சி உச.

தினே னென்னுமால் என்புழிப்போலச் சிந்திக்குந் திரு வென்புழிச் சிந்திக்கலைத் திருவென்றருளிச் செய்தாராக லின், வினைகொண்டு முடிந்தது.[1] "குடிபொன்றிக் குற்றமு மாங்கேதரும்" என்பொழிவிவ்விகுதிதொக்கு நின்றவாறு போலப் பெருகுவிக்குமெனை நிற்கற்பாலது பெருகென விவ்விகுதிதொக்கு நின்றது. ஆண்டுச்செய்யுமெனெச்சம் ஏதுப்பொருட்கண் வந்தது, நோய்தீர்க்கும் மருந்தென் புழிப்போல. வேதசிவாகமங்கள் ஏனைக்கலை ஞானங்கள் போலாது சிவனருளைத்தப்பாதுபயக்குஞ்சாதனமாவதோர் அருட்செல்வ மென்பார் சிவனடியே சிந்திக்குந் திருப் பெருகு சிவஞானம் உவமையிலாக் கலைஞான மென்றும், இவ்வுண்மைக் கேட்டல் சிந்தனையென்னும் அபரஞானம் முத்தியைந்தெழுத்து முன்னுறக்கொண்டு தத்துவத்தெரி யுந்தனிக்கேவல வுணர்வென்பார் சிவஞானமென அத் திருவெழுத்துக் கடலைப்பெய்து சிவஞானமென்றும் ஓதி யருளினர். உவமையின்மையாவது அச்சிறப்பானே அக் கலைஞானங்களின் மேம்பட்டுநிற்றல். எனவே, வேதாகமக் கலைகள் ஏனைக்கலைகளுக்கெனின் உவமையாய் நிலைபெறு மென்றவாறாயிற்று. என்னை? உவமம் [2]"உயர்ந்ததன் மேற்றே" என்பவாகலின். ஈண்டுக் கலைஞானமென்பது முக்கிய விருத்தியினுல் முத்தி பஞ்சாக்கரத்தை யுணர்த்து மேனும், கௌண விருத்தியினுல் வேதாகமங்களையும், மற்றைக்கலைஞானங்கள் அனைத்தினையும் உணர்த்துவதூஉ மாம். என்னை? [3]அவையெல்லாம் அதன்பொருட் பரப்

---

1. திருக்குறள் வெஃகாமை க.
2. தொல், பொருள், உவமவியல் ௩.
3. திருவருட்பயன் அக.

பாய் நிற்றலின். சிவஞானமாகிய கலைஞானமெனக. இதன்கட்பெருகுவிக்குஞ் சிவஞானமாகிய கலைஞானமெனவே கேட்டலும், சிவனடியே சிந்திக்குந் திருவெனவே சிந்தித்தலும் பெறப்படும்

பவமதனையற மாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம் உணர்வரியமெஞ்ஞான மென்பது-பசுத்துவ வாதனையைப் பற்றற நீக்குந்தெளிதலின் மேலாய் விளங்கு ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞான மென்னும் பரஞானத்தினையும் என்றவாறு. ஈண்டுப்பவமென்றது பசுத்துவ வாதனையை. அது பகுதிப்பொருள் விகுதி. பாங்காக நிகழுந் தெளிவைப் பாங்கென்றுபசரித் தருளினர். பாங்காதல் நிட்டையென்னும் அனுபூதி ஞானத்துக்கு அயன்மைத் தாதல். மாற்றும் பாங்கென்பதற்குச் சிந்திக்குந் திருவென்பதற்கு உரைத்தாங் குரைக்க. பாங்கினிலோங்கிய வென்புழி ஐந்தாவது [1]உறழ்பொருவின்கண் வந்தது, [2]"அறத்தினூஉங்காக்கமு" மென்புழிப்போல். ஆண்டை இல் [3]இன்னுருபின்பொருளில்நின்றது. உணர்வரியவென்புழிஅருமை இன்மைமேனின்றது, [4]"உறற்பால-தீண்டா விடுதலரிது" என்புழிப்போல. பரஞானத்தினை உணர்வரிய மெய்ஞ்ஞான மென்றார், அதனைப்பெற்றார் உணர்ச்சி தேய்ந்து அதுவாய் நிற்றலின். உணர்வரிய என்பதற்குப் பாசஞான பசுஞானங்களானே அறிதற்கரியவென்று

---

1. உறழ்தல்—ஒன்றனொன் ஒன்றை மிகுத்தல் (நச்சினார்க்கினியார்) இதலினும் இத்தன்மைத்து இது—உறழ்பொரு
2. திருக்குறள்—அறன்வலியுறுத்தல் 2
3. ஐந்தாம் வேற்றுமைப்பொருள்
4. நாலடியார். பழவினை 9.

பொருள் கூறுதலுமொன்று. உணர்வரிய மெய்யென்பது சிவசத்தென்னுந் துணையாய் நின்றது. தெளிதல் நிட்டையென்னும் பரஞானத்துள் முன்னதற்குப் பயன் பாசவிடுதியென்பார் பவமதனையறமாற்றும் பாங்கென்றும், பின்னதற்குப் பயன் சிவப்பேறென்பார் உணர் வரிய மெய்யென்றும், ஓதியருளினர். ஓங்கிய ஞானமாகிய மெய்ஞ்ஞான மென்க. கலைஞானமும் மெய்ஞ்ஞானமுமாகிய அபர பரஞானங்க ளிரண்டினையும் எனமுடிவு செய்க. இரண்டென்னுஞ் செவ்வெண்டொகையோடு உம்மை விகாரத்தாற் றொக்கது.

இதன்கட் பவமதனையறமாற்றும பாங்கெனவே தெளிதலும், உணர்வரிய மெய்ஞ் ஞானமெனவே நிட்டையும பெறப்படும்.

அங்கிலையிலுணர்ந்தா ரென்பது — அங்ஙனம் உபதேச ஞானப்பாலமிர்தம் உண்டருளிய மாத்திரையே இடையீடின்றி ஓதாமே உணர்ந்தருளினரென்றவாறு. ஏழாவது [1] வினை செய்யிடத்துக் குறிப்பின்கண் வந்தது.

இனித் தாமுணர்ந்தாரெனப் பிரித்துரைத்து, அரிசி தானே யட்டதென்றாற்போல எனிதினுணர்தனோக்கித் தாமேயுணர்ந் தருளினரென்றுரைத்தலும் ஒன்று ஈண் டுத்தாம்பெயர். இப்பொருட்குத் தேற்றேகாரம்விகாரத் தாற் றொக்கதென்றுகொண்டு விரித்துரைத்துக் கொள்க.

இது தவ முதல்வர் சம்பந்தர்தாம் சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞான முவமையிலாக் கலை

---

1. தொல் சொல் வேற்றுமையியல் 20

ஞானம் பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞான மூணர்வரிய மெஞ்ஞானம் அங்நிலையில் உணர்ந்தாரென இயைந்துகொண்டு கூட்டுப்பொட்டும் நிரனிறை பொருட்கும் இடனாய்நின்றவாறு. சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக் கலைஞானம் பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கியஞான மூணர்வரிய மெஞ் ஞான மென்புழிப்பின்னிலைப் பெயர்கள் பயனிலையாகாமை யின்கொண்டுகூட்டேயாம், நிரனிறையன்றென்பாரு முள ராலோவெனின்; [1]நிறுத்தசொல்லுங் [2]குறித்துவருகிளவி யுமாய் [3]இன்னதிதுவென்பதுபடவருஉம் பண்புத்தொகைகள் எழுவாய்ப்பொருள்பட வொட்டிநிற்பனவேயாகலின் அப்பின்னிலைப் பெயர்கள் பயனிலையாதல் ஒரு தலையாகலானும், ஆசிரியர் தொல்காப்பியனார் [4]"நிரனிறுத்தமைத்த நிரனிறைசுண்ணம்-வரைநிலை வைத்த மூன்றலங்கடையே' என்னுஞ் சூத்தரத்து அமைத்த வென்றதனானே இங்ஙனம் பெயர் நிரனின்று தொக்குமுடிபுகோடலும் பிறவும் அப்பொருள் கோளியலேயா மென்றறிவுறுத்தலானும், அது இருபெயரொட் டிலக்கணமும் நிரனிறைப் பாகுபாடும் நிரனிறையோடுகொண்டு கூட்டிடைப்படும் வேறுபாடு முணராதார் கூற்றேயாமென்று மறுக்க. அற்றேல், ஞான மாகிய ஞானமென்பது நின்றுவற்றும் பிறவெனின்; சிவனடியே சிந்திக்குந் திருவைப்பெருகுவிக்கும் சிவஞான மாகிய உவமையிலாக் கலைஞானமென்றும், பவமதனையற

---

1. நிறுத்தசொல்-நிலைமொழி.
2. குறித்துவருகிளவி வருமொழி.
3. தொல் சொல் எச்ச உ௦
4. ஷை பொருள் உவமவியல் கஎ,

மாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமாகிய உணர்வரிய மெஞ்ஞானமென்றும், நுண்ணேக்குப்பொருள் பலவுடைய அடைகொளீஇப் பயன்பெரிது பயந்து இன்னதிது வென்பதுபட இருபெயருமொட்டுதலின், நின்றுவற்றுதல் யாண்டையதெனை மறுக்க. அவையன்னவாதன் முன்னருரைத்தாம்.

இனிப்பாத்தாம் [1]"அந்நிலை மருங்கினற முதலாகிய இம்முதற்பொருட்கு முரியவென்ப" என்பவாகலின் இத் திருப்பாட்டு நோக்குறுப்புப் பெரிதுடைத்தாய் [2]'மறுவில் கொள்கை மூவகைக்காலமும் நெறியினாற்றியவறிவன்றே யத்" தாகிப் பத்துக்குணனு மொய்த்துப்பயின்று அறப் பயனாகிய வீடுபேற்றுணர்வுக் குரித்தாய்வந்த வாகைப் பாடாண்பாட்டென் றுணர்க.

இனிச்சிவனடியையே சிந்தித்தலாகிய திருவைவளர் விக்கும் ஞானமாகிய ஒப்பில்லாத கலைஞானமெனக் கேட்டலையும் சிந்தித்தலையும் ஒருதொடர்பாக ஓதவே அவை இரண்டும் அபரஞானமென ஒன்றுமென்பதூஉம். பசுத் துவ வாதனையைப் பற்றற ஒழிக்குந் தெளிதலின்மேலாய் விளங்கும் ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானமெனத் தெளிதலையும் நிட்டையையும் ஒருதொடராக ஓதவே அவையிரண்டும் பரஞானமென ஒன்றுமென்பதூஉம் போந்தவா றுணர்க.

---

1. ஷை ஷை செய்யுளில் ௱௬.

2. தொல். பொருள். புறத்திணையியல் 20. 'மறுவில் செய்தி' என்பது அச்சுப்பிரதிகளிற் கண்டபாடம்.

அற்றேலஃதங்ஙனமாக; கேட்டன்முதலிய நான்கும் ஞானப்பகுதிகளாகவும், அவை தம்முள் முன்னிரண்டையும் அபரஞானமென்றும், பின்னிரண்டையும் பரஞானமென்றும், ஓதியதெற்றுக்கெனின்,-கேட்டலும் சிந்தித்தலும் நூலும் அருளும் பற்றுக்கோடாக நிகழ்தலானும், அங்ஙனம் ஓதுவாராயிற்றென்பது. கேட்டற்குப் போலச் சிந்தித்தற்கும் நூல்வேண்டுமென்பதும், தெளிதற்கும் நிட்டைக்கும் நூல் வேண்டாமென்பதும், [1]"தெளிதற்கும் நிட்டைக்கும் நூல்வேண்டாமையின் நூலாகுகற்பாலன வாய ஏனை ஐந்துமே ஈண்டு வேள்வி யென்றெடுத்துக் கொள்ளப்பட்டன" என்று திராவிடமாபாடிய முனிவர்கூறு மாற்றானுமுணர்க. அபரோக்ஷஞான மென்றும், பரோக்ஷ ஞானமென்றும், ஞானங்களனைத்தினையும்; இங்ஙனம் இரு முதலில் அடக்கிக்கொண் டோதுதலின், வேதாந்த நூல்களுக்கும் இக்கருத் துடன்பாடாதல் பெற்றாம். அஃதேல் நிட்டையாகிய அனுபூதிஞானம் இறுதிச்சாத்தியமாய் நிற்றலின் அதில் அதன் சாதனமாய் தெளிதலடங்கிப் பரஞான மென ஒன்றாமென்றல் பொருந்தும்; கேட்டலாகிய கலை ஞான சாதனத்தில் அதன் சாத்தியமானசிந்தனை அடங்கி அபரஞானமென ஒன்றா மென்றல் செல்லாதாலோ வெனின்;—அறியாதுகடாயினாய். அதன்கண் அது அடங்கி ஒன்றாமென்றகருத்து — நூல்பற்றுக்கோடாக நிகழும் ஒப்புமைபற்றி ஓரினமாம் என்பதே யாகலின், அதுசெல்லாமை யாண்டையதென்க. இனிக்கேட்டற்குப் போலச்

---

1. சிவஞானசித்தியார். அம். சூத்திரம். திருவிருத்தம் உகஙன் உரை,

சிந்தித்தற்கு நூல்பெரிது வேண்டாமையின் [1]கேட்டலை விந்துஞானமென்றும், சிந்தித்தவாறே இடையீடின்றித் தெளிவுநிகழ்தலின் அவ்விரண்டினையும் பாவனுஞான மென்றும், சாத்தியமாய் முற்றிநிலைபெறுதலின் நிட்டையை அனுபூதிஞானமென்றும் கூறுபவெனவுமுணர்க. இங்ஙனங் கூறவே, சிவஞானந் தொகையானொன்றாயும் [2]வகையா னிரண்டாயும் விரியான்மூன்றாயும் நான்காயுநிற்கு மென்பது தானே போதரும். இன்னும் அதுவே சுத்தாவத்தைப் பற்றி ஐந்தாயும், உபாயம் உண்மை என்னும் வேறு பாட்டாற் சரியை முதனான்கும் பற்றி எட்டாயும், தசகாரி யம்பற்றிப் பத்தாயும், மேற்கூறிய எட்டினிலனும் ஒரோ வொன்று நந்நான்கா முறைபற்றி முப்பானிரண்டாயும் விரிந்தும் நிற்கும். மேலும் விரிக்கிற் பெருகுமென்க. இவை எல்லாம் அவ்விருமுதன் ஞானங்களுள் அடங்குவ னவேயாம். அற்றாகலினன்றே ஞானம் இரண்டா மென்றது உயர் ஞானம் இரண்டாமென்று விதந்தோதியரு ளியதூஉ மென்க. ஈண்டு உயர்ச்சி ஞானப்பகுதிகளெல் லாம் தம்முள்ளடங்கத் தாம் அவற்றுளடங்காது வியா பித்து நிற்றலாம்.

---

1. சிவஞானசித்தி. பதினொராஞ்சூத்திரம். திருவிருத்தம் உள் உரை.

2. இரண்டு-பரம், அபரம். மூன்று-விந்து. ஞானம் பாவனு ஞானம் அநுபூதி ஞானம். நான்கு-சரியாதி. ஐந்து-சுத்த சாக்கிராதி. எட்டு-உபயச் சரியாதி உண்மைச் சரியாதி. பத்து-தத்துவ ரூபமுதல் சிவபோக முடியவுள்ளவை. முப்பானிரண்டு-உபாயச் சரியாதி எட்டும் தனித்தனி சரியாதியால் உறழவருவன.

இனி அவர் இத்திருப்பாட்டிற்கு இவ்வாறன்றி கேட்டன் முதலிய ஞானப்பாகுதி நான்கனையும் முக்கியப்பொருளாகக்கொண்டு இடர்ப்பட்டுப்பொருட்பேறுகற்பித்தொழிவர் அஃது ஆசிரியருக்குக் கருத்தாயின் உவமையிலாக் கலைஞானம் சிவனடியே சிந்திக்குந்திருஞானம், பவமதனையறமாற்றும் பாங்குஞானம்,உணர்வரிய மெஞ்ஞானமென்று முறையான் விளங்கவைத்து [1] ஓதியருளுவார்மன். அவ்வாறோதாமையானும், திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக்கலைஞான மென்றும் பாங்கினிலோங்கிய ஞானம் உணர்வரிய மெஞ்ஞானமென்றும் நிரையாகவைத்து விசேடணவிசேடியமாகப் பொருள்கொள்ள ஓதியருளினமையானும், சிந்தித்தல் தெளிதல் கேட்டல் நிட்டை எனத் தலைதடுமாறச் செய்தலான் ஒரு பயன் போதராமையானும், புராணத்துள் அங்ஙனம் வந்த வழிமொழியின்மையானும் அதுபோலி யுரையென மறுக்க. அல்லதூஉம் பெருகுவித்தலென்னும் வினைக்கட் சிந்திக்குந் திருவென்பது செயப்படு பொருளாம். செயப்படுபொருட்கு வினைமுதல் வேறேயாகலின், அவ்வினைமுதலாய் நிற்குஞ் சிவஞானம் அதனின் வேறெனவேபடும். அங்ஙனமே ஓங்குதலென்னும் உறழ்ச்சிக்கண் பவமதனையறமாற்றும் பாங்கென்பது இதனினென்னும் உறழப்படு பொருளாம். [2] இதனினென்னும் உறழப்படு பொருட்கு இற்றிதென்னும் உறழ் பொருள் வேறேயாகலின் இற்றிதென்னும் அவ்வுறழும் பொருளாய் நிற்கும்ஞானம் அதனின் வேறெனவேபடும்.

---

1. மன்னைச் சொல் ஒழியிசை குறித்து நின்றது.

2. 'இதனினிற்றிது' என்பது தொல். சொல் வேற்றுமையியல் கரு.

ஆகலின், அவை முறையே கலைஞானம் மெய்ஞ்ஞானம் என்பவற்றின் விசேடணங்களேயா மென்பது. இத்தொடர்கள் வேறுற்றானும் விரிக்கப்படும் பிறவெனின்;— அவ்வாறு இடர்ப்பட்டு விரித்துப் பயப்பதூஉம் அப் போலியுரையேயாகலின். அவை பிறவாற்றான் விரிக்கப் படாவென மறுக்க.

அற்றேல், உவமையிலாக்கலைஞானம் சிவனடியே சிந்திக்குந் திருஞானம் பவமதனை யறமாற்றும் பாங்கு ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் எனமுறை தெரித் தோதின் அப்பொருள் போதராவோவெனின்:—போத ராவன்றே; என்னை? அங்ஙனம் ஆற்றொழுக்கா னோதுத லானே கேட்டன் முதலிய நான்கு ஞானங்களும் உணர்ந் தருளினனென்னும் பொருளே போதரு மல்லது ஞானம் பராபரமென இருமுதலாமென்பதும் அந்நான்கும் அவ் விரண்டின் வகையாமென்பதும் பிறவும் ஆண்டு அதனாற் பெறப்படாமையின். அல்லதூஉம், கேட்டன் முதலிய ஞானப்பகுதிகள் நான்கனையும் பிறவாற்றான் வரும் ஞானப் பகுதிகள் பலவற்றையும் தட்டுட்கொண்டு வியாபகமாய் நிற்கும் விழுப்பமுடைய அவ்விருமுதன் ஞானங்களையும் உணர்ந்தானினனென்னும் பிரபலப்பொருள் ஆண்டோது தற் பாலதாய்ச் சிறந்து நிற்கவும், அதனை யொதுக்கி இரு முதன் ஞானங்களையும் அடக்குமாற்றலின்றி அவற்றின பகுதியாய் அடங்குதன் மேலும் ஞானப்பகுதி பலவற்றை யும் அடக்குமாற்றல் அவைபோல இனிதுடைய வாகாமே நிற்கும் அந்நான்கினையு முணர்ந் தருளினனென்னும் வியாப் பியப் பொருளை ஆண்டோதியருள ஆசிரியர் ஒருப்படா ரென்று முரைக்க. அல்லதூஉம், அதுமயங்குதற்கிடனுமா

மென்க அது மயங்குதற்கிடனாதல் யாங்ஙனமெனின்:— அது மேலுரைத்தாம். கடைப்பிடிக்க.

அற்றேல், அப்பொருளெல்லாம் போதரச் சிவனடியே சிந்திக்குந்திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக் கலைஞான மென்றும், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞான மென்றும் ஆற்றொழுக்காற்கூற அமையும்; நிரனிறையாற்கூறல் வேண்டாவெனின்; அற்றன்று. அங்ஙனம் ஆற்றொழுக்குப் பொருள்கோள்படக்கூறலான் அவைபோதருமேனும் அக்கூற்று உறுநோக்கின்றி வெற்றெனத்தொடுத்தலின் உறுநோக்குடைத்தாய் ஆழ்ந்து பொருள் கிடைக்கவைத்தலாற் செய்யுள் சிறப்புறுதல் நோக்கி நிரனிறையாற் கூறியருளலை வேண்டினார் ஆசிரியர் ஆதலின், அதுகண்ணாற் கூறுதல் ஒரு தலையான் வேண்டற்பாற்றேயாமென்க. மற்று எப்பொருளும் அப்பொருள்கோளாற் கூறவே அமையுமெனின், அஃதல்லாப் பொருள்கோள் பல கூறிப்பயந்திலராவர் தொல்லாசிரிய ரென்றுஞ் சொல்லிமறுக்க. இதனானே அத்திருப்பாட்டிற்கு வேறுநான்கு ஞானங் கூறுவார் கூற்று மறுக்கப்பட்டவாறு முணர்க. இனி அவர் இப்பெற்றி யெல்லாம் அறியமாட்டாமையால் 'இரண்டாக ஓசற்பாலதனை நான்காக ஓதின் ஆசிரியர்க்கு மிகை என்னுங்குற்றமா மென்று [1]கொன்னேபுலம்பி யொழிந்தாரென்க.

ஈண்டுக்கூறிய வாற்றால் அபரஞானபரஞான மிரண்டனையுமே ஆசிரியர் ஆண்டுமுறையே கலைஞானமென்றும்

---

1. கொன்னே—பயப்பாடின்றி.

மெய்ஞ்ஞானமென்றும் முக்கியப்பொருளாக வகைபெற அருளிச்செய்தனரென்பது வச்சிரலேபமாக நாட்டப்பட்டது. படவே, பரம் அபரம் என்னும் ஞானங்கள் ஸ்ரீ சேக்கிழார் ஞானச்செய்யுளில் சேர்ந்து அமையாவென்னும் அவர்கூற்று ஊகமில்லாத மடவோர் கூற்றேயாய் ஒழிந்ததென்க.

இம் முறை கிரனிறைப் பொருளே அக்கூற்றிற்படும் முக்கியப் பொருளென்பது, "என்னையுமுன்னையுந் தன்னையுங் காட்டா திந்தியவிடயமே காட்டியியல் வினைமாயை யிரண்டையுமென்னையுமிணக்கிய வாணவ மலத்தின், றன்னுறுவழி நின் சத்தியை நடாத்தித் தகுமதன் சத்திகளெல்லாந் தயங்குநின் னுருவ மூன்றினுன் மாற்றித் தாணிழறந்து காத்தனையே, கன்னலங்கழனிக் காழி மாநகரிற்கவுணிய னிரண்டு ஞானமுமே. கற்றிடாதுணர வீர்க்கிடைபோகாக் கதிர்முலைப்பால் சுரந்தளித்த, வன்னை தன்பகவாந் தன்மையையகற்றி யாதரித்தருள் கொடுத்தவனே யாவடு துறைசையம்பலவாண வடியவர்க் கருணா நிதியே" என்று [1]திருக்கழிநேடிலென்னும் ஞானநூலுள் உலகுடைநாயனர் கூறியருளிய திருவாக்கானும் உணர்க. இனித் தவ முதல்வர் சம்பந்தரென்னு ஞானமேவதுக் கூற்றுளப்பட இவ்விரண்டும் அத்திருப்பாட்டின் முக்கிய அதிகாரணப்பொருள்களென்றும், ஏனைய இவற்றின் வழிப்படுதலின் அதனுட்படு பொருள்களென்றும், நுண்ணுணர்வாற் கண்டுகொள்க. இனி மேற்செல்வாம்.

---

1. திருக்கழிநெடில் எ.

"மேவருஞான மிரண்டவற்றொன்று விமலனார்பாத தாமரையே, யோவறுமன்பினுணர் திருவளிக்கு மொப்பிலாவுயர் கலைஞானந், தாவரும்பவத்தை வேரொடுங்களையுந் தக்கமெய்ஞ் ஞானமொன்றிவற்றாற், சாவதும் பிறப்புந் தணப்புறச்சிவத்தைச் சார்ந்தது வாய்நிற்றல் யோகம்" என்னும் [1] திருத்தணிகைப்புராணச் செய்யுள், சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக்கலைஞானமென்பன ஒருதொடரென்பதறிவித்தற்கு ஒன்றுவிமலனார்பாததாமரையே ஓவறுமன்பினுணர் திருவளிக்கு மொப்பிலாவுயர் கலைஞானம் என்றும், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்பன ஒரு தொடரென்ப தறிவித்தற்குத் தாவரும்பவத்தை வேரொடுங்களையுந் தக்க மெய்ஞ்ஞானம் ஒன்று என்றும், ஆண்டுப்போந்த சொற்பொருளை வாங்கிக் கூறிற்றாகலின், அப்பெரியபுராணத் திருப்பாட்டின் பொருளைக் கசடறவுணர்த்தும் [2] உபபிருங்கணமேயாம். வேதாகமவசனங்கள் மெய்ப்பொருள் இதுவெனத் தெற்றென அறியவாராது பல பொருள்படப் பொதுமையினின்றக்கால், முனிவர்கள் மெய்ப் பொருள் இதுவென்பது தோன்ற ஆண்டுக்கிடந்தபடி அவற்றைத் தத்தம் நூல்களில் வாங்கி உபபிருங்கணமாகக்கூறி விளக்கிப் போவர். அது போலவே, அருண்மொழித் தேவர் சிவனடியே யென்னுந் திருப்பாட்டில் ஓதியருளியன பராபர ஞானங்களேயோ அவற்றின் வேறாவனவேயோ என்று

1. தணிகைப்புராணம். அகத்தியனருள் பெறுபடலம், 353

2. இஃது அடுத்த வாக்கியத்தால் விளக்கப்படுகிறது.

மயங்கும் மந்தபுத்தியுடையார்க்குக் கலைஞானம் தன் பய ஞகிய சிந்தனையினுலும் மெய்ஞ்ஞானம் தன்சாதனமாய தெளிதலானும் விசேடிக்கப்பட்டு ஆண்டு முறையாக நிரை பெறநின்றன என்று அறிவுறுத்தற் பொருட்டுக் கச்சி யப்ப முனிவர் அவற்றினை உபபிருங்கணமாக அவ்வுப தேசவுரையில் வாங்கிக்கூறி விளக்கிப் போயினரென் றுணர்க. அவரஃதுணராது சேக்கிழார் ஞானம் நான் காகக்கூறிஞர்; [1] தம்பிரான் ஞானமிரண்டாகச்சொற்ருர்; அதனுல் அதற்கு இது துணிபுரையாகாதெனத் தமக்குத் தோன்றியவாறு பயனில்லனபல பாராட்டி விடுத்தார். அவர் இரண்டு ஞானத்தில் நான்கு ஞானம் அடங்கா வென்றது இரண்டில் நான்கு அடங்காவென்னும் கணித ஞானங்கொண்டு போலும். இக்கணித ஞானங் கொண்டு ஒன்ருயுள்ள மாயையில் பலவாகிய தத்துவ தாத் துவிகங்கள் அடங்காவென்றும் ஒன்ருயுள்ள பாரசத்தி யில் பலவாகிய சத்திபேதங்கள் அடங்காவென்றும், இங்ஙனங் கூறவும் முயல்வர்போலும். இனி மேல்நடப் பாம்.

[2] "துடைத்தலுஞான போனக முண்டதோன்ற லாரான்றபல் கலைக, ளிடைப்புணர் ஞானந் தோய்ந்து தோய்வின்றி யெவ்வுயிர்க் கண்ணுமோர் நிலையே, படைத் தளித்தழிக்கு நிறைபரம்பொருளுட் படரிரு ஞானமு

---

1. தணிகைப்புராண ஆசிரியர் ஸ்ரீமத் கச்சியப்ப முனிவர்.

2. சீகாழித்தல புராணம். திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதார 11.

மாங்கே, கிடைத்தன ரொருதன்றுறைதையுமாங்கே கிட்டி ணர் சிறிதுளம் வெகுண்டு" என்னுஞ் சீகாழிப் புராணச் செய்யுள் அப்பெரிய புராணத் திருப்பாட்டின் பொருளைச் சாதிக்கும் உபபிருங்கண மாகாது-என்றார் அதுதானும் அப்பெரிய புராணத் திருப்பாட்டின் பொருளை அவ்வாறு வாங்கிக்கூறி அதற்கு உபபிருங்கணமாகியே நிலைபெறுவதாம். யாங்ஙனமெனின்;— கூறுதும்: இதன்பொருள் — ஞானபோனகமுண்ட தோன்றலா ரென்பது — உபதேச ஞானப் பாலமுதுண்டருளிய ஆளுடைய பிள்ளையார் ஆங்கேயென்பது — அவ்வுபதேச ஞானப்பாலமுதுண்டருளிய மாத்திரையே—ஆன்ற பல்கலைகளிடைப் புணர்ஞானம் என்பது—விரிந்த வேதாகம முதலிய பலகலைகள் பற்றுக் கோடாக விளங்கும் கேட்டல் சிந்தித்தல் என்னும் அபர ஞானங்க ளிரண்டினையும் - எவ்வுயிர்கண்ணும் ஓர் நிலையே நிறை என்பது —எல்லா உயிர்களிடத்தும் ஒரு பெற்றி யாகவேகலந்து நிறைகின்ற-படைத் தளித்தழிக்கும் பரம் பொருளுள் என்பது-படைத்தும், காத்தும், துடைத்தும் அனுக்கிரகிக்கின்ற பரம்பொருளாகிய சிவபிரானது சீபாத நிழலின் கீழ்—தோய்ந்து தோய்வின்றிப் படரிரு ஞானமும் என்பது — பசுத்துவ வாதனை பற்றியும் பற்றுதுங் கலந்து விரியுந் தெளிதலும் நிட்டையுமாகிய பரஞானங்கள் இரண்டினையும்-கிடைத்தனர் என்பது—இடையீடின்றி ஒதாமே யுணர்ந்தருளினரென்றவாறு. இரண்டு என்னுஞ் செவ்வெண்டொகையோடு உம்மை விகாரத்தாற் றொக்கது நிறைபரம்பொருள் படைத்தளித்தழிக்கும் பரம் பொருள்எனத் தனித்தனி சென்றியையும். தோய்ந்து படர்ஞானம் தோயாது படர்ஞானம் என்க இனி மெய்ஞ்

ஞானமும் என்பது பாடமாயின், ஆன்ற பல்கலைகளிடைப் புணர்ஞானத்தோடு மெய்ஞ்ஞானத்தினையுங் கிடைத்தனர் என்று உரைக்க. ஈண்டு ஆன்ற பல்கலைகளிடைப் புணர் ஞானம் மெய்ஞ்ஞானம் என்பன முறையே அபரஞான மும் பரஞானமும் ஆம் என்பது மேலுரைத்த வாற்றாற் கடைப்பிடிக்க. இதன்கண் ஆன்றபல்கலைக ளிடைப்புணர் ஞானம் எனவே கேட்டல் சிந்தித்தலும், தோய்ந்து தோயாதுபடர்ஞானம் எனவே தெளிதல் நிட்டையும் பெறபடுமாறு காண்க. இப்பொருட்கும் இரண்டென்னும் செவ்வெண்டொகையோடு உம்மை விகாரத்தாற்றொக்க தென்க. எண்ணும்மையும் அற்று. மற்றை உம்மை சிறப்பும் எண்ணுமாம். இச்செய்யுட்கு இவ்வாறு செம்பொருள் கொள்ள அறியாது இடர்ப்பட்டுத் தமக்குத் தோன்றிய வாறெல்லாம் விருத்தப் பொருள் கூறியொழிந்தார். அது நிற்க.

அவர் ஞானம் கேட்டன்முதல் நான்கா மென்பதற்கு மேற்கோளாகக் "கேட்டலுடன் சிந்தித்தறெளித னிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின்ஞானம" என்னுஞ் [1]சிவஞான சித்திச் சுருதியை யெடுத்துக்காட்டினர். இச் சுருதியில் கேட்டல் சிந்தித்தல் இரண்டு மோரினமாமென் றுணர்த்துதற்குக் 'கேட்டலுடன் சிந்தித்த' லென்று அவை யிரண்டையுமுடன் கொடுத்துக் கூட்டியுரைத்து அங்ஙனம் உரைக்கு முகத்தானே மற்றைத்தெளிதல் நிட்டை இரண் டும் மற்றோரினமாமென்று ஆசிரியர் அறிய வைத்தமையா னும், இதற்கும் பெரியபுராணத் திருப்பாட்டின் முக்கியப்

---

1. சிவஞான சித்தி. எட்டாஞ்சூத்திரம் திருவிருத்தம் உச

பொருட்கும் யாதோரியைபு இல்லாமையானும், அது அவர்கட்கு இஷ்ட [1]விகாதம்பண்ணி நமக்கே பலந்தருமென்க. தீக்ஷைபற்றி ஓரினமாமென்ப தறிவித்தற்குக் "கிரியாயோக" மென அவ்விரண்டினையுஞ் [2]சமாசனுக்கி [3]முதனூலாசிரியரும் [4]புடைநூலாசிரியரும் [5]முதனூலுள்ளும் [6]புடைநூலுள்ளும் இவ்வாறு ஓதியருளியதூஉங் காண்க இங்ஙனமாகலின், அச்சுருதிகொண்டு பெரிய புராணத் திருப்பாட்டிற்கு நான்கு ஞானமுணர்த்தி நாட்டப்புகுந்த அவரது சம்பிரமம் வாளாபோயிற்றென்க. இச்சுருதிக்கும் அத்திருப்பாட்டின் முக்கியப்பொருட்கும் இயைபின்மை மேற்கடாவிடைகளான் விளங்கக்கூறினும். கடைப்பிடிக்க. வேதாகமங்கள் சிரவணம் மநநம் நிதித்தியாசனம் சமாதியெனப் பிரசித்தமாகக்கூறும் ஞானப் பகுதிகள் நான்கும் ஞானநூலாராய்ச்சி யுடையார்க்கெல்லாம் வெள்ளிடைமலை போலத் தெள்ளிதின் அறியக்கிடக்கும்[7] விழுப்பொருள்களேயாம். இங்ஙனமாகவும், எவரோ ஞானம் நான்கு யாண்டுங்கண்டதுமில்லை கேட்டதுமில்லையென்று சொற்றாரென்றும், தாம் சிவஞானசித்தியில் அது கண்டு எடுத்துக்காட்டி நால்வகை ஞானம்நாட்ட எழல் வேண்டிற்றென்றும், அவர்பெருமிதம்பாராட்டியது அம்மம்ம சாலவும் வியக்கற்பாலதேயாம்!

---

1. விகாதம்—அழிவு
2. சமாசன்—தொகை
3. ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார்
4. ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்
5. சிவஞானபோதம் ௮ம் சூத்திரத்து முதலதிகரணவேது
6. சிவப்பிரகாசம்—பாயிரம் ௧௰
7. விழும்பொருள்—சிறந்த பொருள்.

பெரியபுராணத் திருப்பாட்டில் ஆசிரியர் வெகுபிர பலார்த்தங்கள் சித்திக்கும்படி வைத்தருளிய முறைநிரை நிறைச் செம்பொருளின் உண்மைகாணமாட்டாது. அதனை ஒழுகவிட்டுச் சிந்தித்தல் தெளிதல் கேட்டல் நிட்டை என்று குளறுபடையாக வெறும்போலிப்பொருள் கொண்டாராகலானும், அக்குளறு பாட்டினை ஸ்தாபிக்கும் பொருட்டு ஞானபேதவிளக்கத்தும் ஆசாரியப்பிரபாவத்தும் கூரேசவிசயபங்கத்தும் போலி உரைகள் பலபகர்ந்தாராகலானும் அவர் கூறிய குளறுபடைஞான முதலிய தையறியாமை அவரையே சாருமென்க. இன்னும் பழித்துரையும் தருக்குரையும் அவர் தம்பேத விளக்கத்தின் மிகுத்துரைத்தார். அது தோல்வித்தானம் எய்தும் வாதி கதையாகலானும் பயனொடு படாமையானும் யாம் அவற்றை மறித்துரையாம். இனி அமைக.

இதுகாறுங் கூறிப்போந்த நியாயங்களானே அவர் உரை பூர்வபக்கமே யென்பதும் யாங்கூறிய முறை நிரானிறைச் செம் பொருளும் பிறவும் ஆசிரியர் திருவுளக்கருத்தாகியமைந்த சித்தாந்தப் பொருளென்பதும் தெற்றெனப் புலப்படுதலின், நல்லோர் இப்பொருளே கொண்டு மகிழ்வரென்க.

இனி அவர் மெய்ப்பொருள்காண்பது கடனென்று சமநிலை நின்று இலக்கணவரம்புபற்றிக்கூறிய நியாய உரைகளை மனம்பற்றி யுணர வொருப்படுவரேல், தாம் கூறிய உரை போலி உரைஎன்றும் நாங்கூறியஉரை மெய்யுரை என்றும் அத்திருப் பாட்டிற்கு மெய்யுரை பெற்றேமென்றும் மகிழ்ச்சியுறுதன் மேலும் தங் தவற்றிற்கு இரங்கு

தனுஞ்செய்வர். இங்ஙனம் மெய்யுணர ஒருப்படமாட்டா ராய்த் துரபிமானந் துரப்பத்துரப்புண்டு கொண்டது விடாது சாதிப்பாமென்று தருக்கி விதர்க்கம் விளைத்துப் பழித்துரை மிகுத்துரைக்கலுறுவரேல், உண்மை நூலின் மெய்ப்பொருளை எண்ணெழுத்துக் கண்கொண்டு தாமே யுமறியுமறிவின் மதுகை பெற்றுடையரல்லர்; அறிந்தார் கொளுத்தக்கொள்ளும் சமநிலையோடு பட்டியலும் அறி வுவாயினும் பெற்றுடையரல்லர்; இவர் அறிவின்பெற்றி எற்றெற்றென்று நல்லோர் எள்ளி நகையாடிடப்படுவர் என்க. அற்றாக; அவர் கொள்ளுமாற்றான் மீட்டும் கொளுத்தலுறுமோ வெனின், கொளுத்தலுறுமன்றே; என்னை? [1] "உணர்ச்சிவாயிலுணர்வோர் வலித்தே" என் றும், [2] 'தக்கன்பான்ஞானத் தநீசியுபதேசமெல்லாந், தொக்கதனலாவதென்னை சொமேசா—மிக்குக், களித் தானைக் காரணங்காட்டுதல் கீழ்நீர்க்குளித்தானைத்தீத்துரீ இயற்று" என்றும், ஓதியருளுபவாகலின் என்க. அற்றாக, பழித்துரை களையாவழிப்படுமேதமும் உண்டாகலின் அது களையா தடங்குதல் செயற்பாற்றன்றெனின்,— ஒருவர் ஒள்ளறிவுடையராய்நின்று எள்ளுரையே யேதம் பயப்ப வாகலின் அவைதர்மை நியாயப்படைகொண்டு களைதல் ஒருதலை யான் வேண்டற்பாற்றேயாம். வெள்ளறிவுடைய ராய் நின்று எள்ளுரை அவர்தம் தோல்வித் தானத்தை வெளிப்படுத்துதலல்லது எள்ளப்படுவார்க்குச் செய்யு மேதமொன்றில்லாமை யானும், அவர் பழித்துரைபொ

---

1. தொல் சொல் உரி கூ௯.
2. சோமேசர் முதுமொழிவெண்பா கூ௩.

றுத்தல் அறனுய்ச் சிறக்குமென் பவாகலானும், அவர் பழித்துரைகளை நியாயங்கொண்டு களைய முயறலானும்; அணிகலனெனக்கொண்டு வந்தடங்குதலேசெய்வாமென்க அல்லதூஉம், நாம் [1] 'வாதுசெய்யும் பூசலுக் கெதிராகக் கடவமன்றித் [1] 'தீயவாய் திறந்தவையும் பூசலுக் கெதிராகக் கடவமல்லே, மென்றுஞ்சொல்க.

என்றுமின்பம் பெருகுமியல்பினு
லொன்றுகாதலினுள்ளமுமோங்கிட
மன்றுளாரடி யாரவர்வான் புகழ்
நின்றதெங்குநிலவியுலகெலாம்.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

மேய்கண்டதேவர் திருவடி வாழ்க.
சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

ஞா ன சூ டா ம ணி

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

1. திருவிளையாடற்புராணம் இசைவாது வென்ற படலம் கங.